10 JAN 2012
சென்னை-600 005

சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி – தற்காலிகமாக கண்காணிப்புப் பொறியாளர்களாக பதவி உயர்வளிக்கப்பட்ட பொறியாளர்களின் பணியை வரன்முறைப்படுத்தி – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை

அரசாணை (பத்தாண்டு) எண். 3 நாள் 06.01.2012

படிக்கப்பட்டது:-

1) அரசாணை (2ப) எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.4) துறை, நாள்.16.12.2008.
2) அரசாணை (2ப) எண்.104, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.4) துறை, நாள்.26.10.2009.
3) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.41125/2011/எப்1, நாள் 15.11.2011.

*****

ஆணை :-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் ஜவஹர்லால் நேரு நகர்ப்புர புனரமைப்புத் திட்டப் பணி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர - வளர்ச்சித் திட்டம்–II ஆகியவற்றின் கீழ் பிரத்தியேகமாக நிதித்துறையின் ஒப்புதலுடன் தோற்றுவிக்கப்பட்ட கண்காணிப்புப் பணியிடங்களில் திருவாளர்கள். ஆர்.விஜயகுமார் மற்றும் கே. பூபதி ஆகியோர், முறையே மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் ஒப்பந்த அடிப்படையில் மாற்றுப் பணியில் நியமனம் செய்யப்பட்டனர். இதைப் போன்று, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சேலம் மாநகராட்சியில் திட்டப் பணிகளுக்காக தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட ஒரு கண்காணிப்புப் பொறியாளர் பணியிடத்தில் திரு.கே. பாலசுப்பிரமணியம், கண்காணிப்புப் பொறியாளராக ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டார்.

2. தற்போது 2011–2012–ஆம் ஆண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர்களின் பதவி உயர்விற்கு கண்காணிப்புப் பொறியாளர்களின் தேர்ந்தோர் பட்டியல் வெளியிடப்படவேண்டிய நிலையில், மேலே முதலாவது மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில், தற்காலிகமாக கண்காணிப்புப் பொறியாளர்களாக

பதவி உயர்வுபெற்ற கீழ்க்காணும் கண்காணிப்புப் பொறியாளர்களின் பணியை முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது:—

| | | |
|---|---|---|
| 1 | ஆர். விஜயகுமார் | கண்காணிப்புப் பொறியாளர், மதுரை மாநகராட்சி. |
| 2. | கே. பூபதி, | கண்காணிப்புப் பொறியாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி. |
| 3. | கே. பாலசுப்பிரமணியம் | கண்காணிப்புப் பொறியாளர், சேலம் மாநகராட்சி. |

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷீலா பாலகிருஷ்ணன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை— 600 005.
சம்பந்தப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர்கள்.
(நகராட்சி நிர்வாக ஆணையர் வழிமுறையாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை— 600 108.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
நகல்:—
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை—600 009.
கூடுதல் தலைமைச் செயலர் அவர்களின் தனிச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை—600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.2) துறை, சென்னை— 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.